# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

O.S.No.. 90/2019 தேதி- 03.02.2026

(P.W.1) . சித்ரா

**குறுக்கு விசாரணை**

நான் 2010 ஆம் வருடம் சொத்தை விலைக்கு வாங்கினேன். மேற்படி சொத்துதான் இந்த வழக்கின் பட்டிகை சொத்து என்றால் சரிதான். நான் இந்த வழக்கை நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி 1995 ஆம் வருடமே வீடு கட்டி அனுபவித்து வருகிறார் என்கிற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வீடு இருக்கும் விபரம் எனக்கு தெரியும். மேற்படி வீட்டிற்கு வெள்ளியாவிளை, ஈச்சுவிளை ரோட்டின் வழியாகத்தான் செல்லவேண்டுமென்றால் சரியல்ல. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் மேற்படி ரோட்டின் வழியாகத்தான் வீட்டிற்கு செல்லவேண்டுமென்றால் சரியல்ல. வெள்ளியாவிளை, ஈச்சுவிளை ரோட்டிலிருந்துதான் மேற்படி வீட்டிற்கு மின்இணைப்பு ஒயர் செல்கிறது என்றால் எங்களது விளைக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

வழக்கு பட்டிகை சொத்தின் மேற்கு பக்கம் முருகேசன் சொத்து, வடக்கு பக்கம் பிரதிவாதியின் சொத்து, கிழக்கு பக்கம் ராஜ் என்பவரது சொத்து, தெற்கு பக்கம் ரோடு உள்ளது. மேற்படி ராஜ் என்பவர் 3 லிங்ஸ் அகலம் இடைவெளிவிட்டுள்ளார் என்றால் சரியல்ல. தங்கையன் என்பவரின் மனைவி என்பவரிடமிருந்துதான் நான் வழக்கு பட்டிகை சொத்தை கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். தங்கையன் அவர்களின் 3 பிள்ளைகள் அவர்களது பங்கை பொறுத்து கிரையம் கொடுக்காததால் மேற்படி கிரைய ஆவணம் செல்லுபடி ஆகாது என்றால் எனது மாமி கனகம் என்பவருக்கு உரிமைப்பட்ட சொத்து அதில் அவரது வாரிசுகளுக்கு எந்த உரிமையும் கிடையாது.

காவல்நிலையத்தில் புகார் என்று கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. 27.12.2018 அன்று வழிப்பாதையை அடைத்ததால் பிரதிவாதிக்கு காயம் ஏற்பட்டு அவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று 28.12.2018 சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் எந்த பிரச்சனையும் ஏற்படவில்லை. 27.12.2018 அன்று நான் மேற்கு பக்கம் நின்ற மின்கம்பத்தை எடுத்து கிழக்கு பக்கமாக மாற்றினோம் என்றால் சரியல்ல. நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

பிரதிவாதியின் வீட்டிற்கு மின் உபயோகம் இருக்கிறதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பொதுவாக ஒருவர் நடைபாதையாக உபயோகிக்கும் இடத்தில் குப்பையை கொட்டமாட்டார்கள் என்றால் சரிதான் ஆனால் வழக்கு பட்டிகை சொத்தில் தவறாக உபயோகித்து வருகிறார்கள். ரோட்டிலிருந்து வழக்கு பட்டிகை சொத்திற்கு வருவதற்கு கல்லால்ஆன பாலம் கட்டப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

பாலகல்லை 27.12.2018 அன்றுதான் அகற்றினோம் என்றால் சரியல்ல. 05.05.2019 அன்று வழிப்பாதையை அடைக்க சென்றதால் காவல்நிலையத்தில் பிரதிவாதிகள் புகார் கொடுத்தார்கள் என்றால் விளையின் வழியாக செல்லும்போதெல்லாம் பிரச்சனை ஏற்படும் மேற்படி பிரச்சனை ஏற்படும்போது எனது கணவரின் காலிலும் காயம் ஏற்பட்டு போலிசாரால் தீர்த்து வைக்கப்பட்டது. நான் பொய் சாட்சிளம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.